2016 ஜனவரி 21]
12—

ஆவின் பாலகம்

***53871—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, உதயம் நகரிலுள்ள மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பால் வளத் துறைக்கு முன் எப்போதும் இல்லாத சரித்திர சாதனையாக ரூ.593 கோடி வழங்கி இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்திய வாழும் வள்ளல்; தமிழகத்தின் வளமைக்காகவும், எதிர்கால சந்ததியினருக்காகவும் சிந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி வெற்றி கண்ட பார் புகழும் பாரதத் தாய், தாயுருவப் போராளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, உதயம் நகர் மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் மாணவர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சுடு பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை செய்வதற்கு உரிய இடம் மாநகராட்சியால் ஒதுக்கீடு செய்யப்படும்பட்சத்தில், பால் பொருட்களின் விற்பனை நிலையம் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, தங்கள் பெயரை தாங்கள் மறக்கின்ற அளவிற்கு மக்கள் கூப்பிடும் "அம்மா" என்ற ஒற்றை சொல்லுக்குக் கட்டுப்பட்டு, தாங்கள் செய்கின்ற எண்ணிலடங்கா திட்டங்கள்மூலம் பெற்ற தாயை மிஞ்சும் அளவிற்கு மக்களைக் காக்கும் மாதரசி அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

அம்மா, வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்க படகு அளித்து, பசியாற உணவு அளித்து, பாதுகாப்பான இடம் அளித்து, நோய் தொற்றாமல் இருக்க மருந்து அளித்து, வங்கிக் கணக்கில் பணம் அளித்து, பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அன்பு உள்ளத்தால் பாராட்டப்படுகின்ற வரலாற்று நாயகி அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நமக்கு நாமே' என்று சுயநலத்துடன் சுற்றித் திரியும் சில சுயநலவாதிகள் மத்தியில், 'மக்களுக்காக நான்' என்று மக்களுக்காக ஆணித்தரமாக அர்ப்பணித்து வாழும் எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) 'தமிழகம்தான் என் இல்லம்; தமிழக மக்கள்தான் என் குழந்தைகள்' என்று வாழ்ந்துகொண்டிருக்கின்ற வாழும் தெய்வம் அம்மா நீங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) மழை வெள்ளத்தால் அதிக பாதிப்புக்குள்ளான வேளச்சேரி தொகுதியை தங்கள் கருணை உள்ளத்தால் மூன்றே நாட்களில் மீட்டெடுத்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வேளச்சேரி தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, உதயம் நகரில் மாநகராட்சி இடத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தால், பால் பொருட்களின் விற்பனை நிலையம் அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்ததற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*